# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 03 புதன்கிழமை (19-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 226

# விடுவிக்கப்பட்ட மாலுமிகள் இன்று சென்னை திரும்புவர்!

## இலங்கை அதிகாரிகளுக்கு விசாரிக்க வாய்ப்பில்லை

கொழும்பு, ஓகஸ்ட் 19

முல்லைத்தீவுக் கடலில் தகர்க்கப்பட்ட ''பிரின்ஸஸ் காஷ்'' சரக்குக் கப்பலின் இந்திய மாலுமிகள் 17 பேரையும் விடுதலைப்புலிகள் விடுவித்ததை அடுத்து நேற்று மாலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளால் கொழும்புக்குக் கூட்டிவரப்பட்டு இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் அவர்கள் நேரடியாகக் கையளிக்கப்பட்டனர்.

இன்று காலை அவர்கள் சென்னைக்கு விமானத்தில் புறப்பட்டுச் செல்வர். அதற்கு இடையில் இலங்கை அதிகாரிகள் கப்பல் சம்பவம் குறித்து அவர்களிடம் விசாரிக்க வாய்ப்பு ஏதுமில்லை என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாலுமிகள் 17பேரும் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படக் கூடாது என்றும் —

நேரடியாக இந்தியத் தூதரக அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் —

நிபந்தனையுடனேயே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் இந்த மாலுமிகளைப் புலிகள் ஒப்படைத்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனத்தில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அழைத்து வரப்பட்ட இந்த மாலுமிகளைப் பத்திரிகையாளர்கள் பார்க்கவோ, சந்திக்கவோ அனுமதிக்கப்படவில்லை.

இந்திய அதிகாரிகள் அவர்களைப்பொறுப்பேற்று தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்குக் கூட்டிச் சென்று தங்கவைத்தனர்.

இன்று காலை சென்னைக்கு அவர்கள் பயணமாவார்கள் என்றும் —

அதற்கு இடையில் இலங்கை அதிகாரிகள் அவர்களை விசாரிப்பதற்கு வாய்ப்பு ஏதுமில்லை என்றும் —

செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தகர்க்கப்பட்ட கப்பலில் பணியாற்றிய நான்கு இலங்கை மாலுமிகளும் தொடர்ந்து புலிகளின் காவலில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஈழ அகதி தற்கொலை

கொழும்பு, ஓக. 19

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த இலங்கைப் பெண் ஒருவர் வறுமை காரணமாக தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மகாதேவன் மதிராணி (வயது 37) என்ற மூன்று பிள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகம் செம்மணியிலா? தோண்டு! தோண்டு!!

### நாடாளுமன்றில் பதாகை

'ஜனநாயகம் செம்மணியிலா? தோண்டு! தோண்டு!!' இப்படித் தெரிவிக்கும் சுலோக அட்டை நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க. உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரால் காட்டப்பட்டது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சி நான்கு வருடங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூர்த்தியானதை ஒட்டி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐ.தே.க வினர் நேற்று நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்த அமளி துமளிக்கு மத்தியிலேயே இந்த சுலோக அட்டை தூக்கிக் காண்பிக்கப்பட்டது. (மேலும் செய்திகள் 9 ஆம் பக்கத்தில்)

(உ-3)

## திருமலை நகரத்தை தாக்கிய மினி சூறாவளி!

திருகோணமலை, ஓக. 19

திருகோணமலை நகரை நேற்றுப் பிற்பகல் மூன்று நிமிடங்கள் மினி சூறாவளி ஒன்று தாக்கியது; மழையும் பெய்தது.

நேற்றுப் பிற்பகல் 2-40 மணியளவில் மூன்று நிமிடங்கள் பலத்த காற்றுடன் மினி சூறாவளி சுழன்றடித்தது.

இதனால் மக்கெய்சர் விளையாட்டுஅரங்கில் உள்ள உடல் வலுவூட்டும் நிலையத்தின் (ஜிம்) கூரைப் பகுதி தூக்கி வீசப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதி அண்மையிலேயே அதிக செலவில் புதிதாக அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று ஹர்த்தால் தளர்வு!

வவுனியா, ஓக. 19

வவுனியாவில் புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள எரிபொருள் கட்டுப்பாடுகளை எதிர்த்து புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஹர்த்தால்இன்று மட்டும் தளர்த்தப்படும் என அந்த அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

நேற்று மூன்றாவது நாளாகவும் வவுனியாவில் ஹர்த்தால் தொடர்ந்தது. கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. துவிச்சக்கர வண்டிகள் மட்டுமே நகரில் பயன்படுத்தப்பட்டன.

தொடர்ந்து மூன்று நாள்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதனால் மக்களுக்கு தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து இன்று கடைகளைத் திறந்து மக்களுக்குதேவையான பொருள்களை வழங்குமாறு புளொட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டுப்புரளி

கொழும்பு பம்பலப்பிட்டி டுப்புளிக்கேஷன் வீதியில் நேற்று பிற்பகல் ஒருமணி அளவில் குண்டு ஒன்று கிடப்பதாக பரப்பப்பட்ட வதந்தியால் அங்கு பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

ஒரு பெட்டி அநாதரவாகக் கிடப்பதாகத் தெரிவித்து பரப்பப்பட்ட வதந்தியை அடுத்து அங்கு குண்டு செயலிழப்புப் பொலீஸார் வரவழைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது; ஆனால்அங்கு குண்டு இருக்கவில்லை.

அதையடுத்து அப்பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்

(உ-5)

## ரெலோ செல்வம் இன்று எம்.பியாகப் பதவியேற்பு

கொழும்பு, ஓக. 19

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ரெலோ அமைப்பைச் சேர்ந்த செல்வம் இன்றுபதவிப்பிரமாணம் செய்யவிருக்கிறார்.

வன்னி மாட்ட புளொட் உறுப்பினராகப்பதவி வகித்து வந்த எஸ். சண்முகநாதன் குண்டு வெடிப்பில் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவர் நியமனம் பெறுகின்றார்.

ரெலோ தலைவராக இருந்த இவர் கடந்த தேர்தலில் புளொட் பட்டியலில் போட்டியிட்டார் அப்பட்டியலில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள் வரிசையில் அடுத்ததாக இருந்தஅவர் தற்போது ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நியமிக்கப்படுகின்றார்.

ரெலோ அமைப்பை விட்டு ஒதுங்கி நீண்ட காலமாக இந்தியாவில் தங்கியிருந்த செல்வத்தை கடந்த வாரம் அங்கு சென்றிருந்த ரெலோஅமைப்பின் முதல்வர் என். ஸ்ரீ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்துக்களினால் 2 நாள்களில் 2பேர் பலி!

### நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

உரும்பிராய் வடக்கில் நேற்று படையினரின் வாகனம் ஒன்று தனியாரின் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற உரும்பிராயைச் சேர்ந்த — தொழில் நுட்பக் கல்லூரி மாணவனான பவளகாந்தன் விஷ்ணுராஜ் (வயது 19) என்பவர் அந்த இடத்திலேயே பலியானார். மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணம் செய்த பவளகாந்தன் பகீரதன் (வயது 17) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்கவின் வாகனமே விபத்துக்குள்ளானது. அவ்வேளை வாகனத்தில் ஜெனரல் முனசிங்க இருக்கவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் இன்று முழு கடையடைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 19

''பிரின்ஸஸ்காஷ்'' கப்பல் மூலம் பொருள்களை ஏற்றியதால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவும், கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் யாழ்ப்பாண வணிகர் கழகம் இன்று கடை அடைப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துக் கடைகளையும் பூட்டி இன்று கடையடைப்புக்கு ஆதரவு தருமாறு வணிகர் கழகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் கேட்டுள்ளது.

இன்றைய கடையடைப்புக்கு தாமும் ஆதரவு வழங்குவதாகவும்—

கப்பல் தகர்க்கப்பட்டதை காரணம் காட்டி சில வர்த்தகர்கள் பொருள்களை பதுக்கி, அதிக விலைக்கு விற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் விவகாரத்தால் கிளின்ரன் பதவி துறப்பார்?

வாஷிங்டன், ஓக. 19

பாலியல் உறவு விவகாரச் சிக்கலில் சிக்கியிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தமது பதவியைத் துறப்பாரா என்ற கேள்வி தற்போது பரவலாக கிளப்பப்பட்டு வருகின்றது.

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணியாளர் மொனிக்கா லூயின்ஸியுடன் தாம் முறைகேடான பாலியல் உறவு வைத்திருந்ததை கிளின்ரன் ஒப்புக் கொண்டதை அடுத்து அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (விவரமான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

(உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனில் ஆட்ஸ்
## SUNIL ARTS

கொழும்பிலுள்ள சிறந்த கலர் லாப்களில் (Colour Lab) உங்கள் கலர் படங்களை உங்கள் தேவைக்கேற்ற அளவுகளில் கழுவிப் பெற்றுக்கொள்ளுங்கள்

卐 PHOTO CHOROME
卐 NINE HEARTS
卐 COLOUR CHOROME
卐 ACME - AMARA

இவற்றின் நவீன, நிபுணத்துவ சேவை உங்களுக்காக வழங்கப்படுகிறது.

சிறந்த தரம், குறைந்த விலை, துரித சேவை உங்கள் கலர்படச் சுருள்களை ஒப்படைக்க வேண்டிய இடம்

## சுனில் ஆட்ஸ்
## SUNIL ARTS

272, ஸ்ரான்லி வீதி, (மேல்மாடி)
யாழ்ப்பாணம்,

(சி/4602)


## சகலவர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்

முல்லைத்தீவு பிறின்ஸஸ் காஷ் கப்பல் சம்பவத்தை கண்டித்து பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இன்று (19-08-98) கடைகளை பூட்டி ஒத்துழைக்குமாறு சகல வர்த்தகர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/4603) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## TENDER NOTICE

### MINISTRY OF HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT OF BUILDINGS

1. The Tender Board of Department of Buildings, will receive sealed tenders for the following items of work and receiving will be closed at 10.00 a.m. on 09-09-98.
2. Tenders should be submitted on the forms available from Chief Engineer (Northern Division, Department of Buildings, 46, Somasuntharam Lane, Jaffna. upto 3 30 p. m on 28-08-98 on payment of non refundable tender fee of Rupees One Thousand (Rs. 1000.00) only. Belated callers will be charged additionally, a late fee of Rupees Three Hundred (Rs 300.00) only, for each day of delay, prior to issue of tender documents for each work.
3. Tenders will be opened immediately after the closing, at Contract Branch, Department of Buildings, Sethsiripaya, Battaramulla. Tenderers or their authorised representatives are requested to be present at the opening of tenders.
4. Tender forms will be issued only to Contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and Grading of Construction Contractors developed by Institute for Construction Training and Development (ICTAD) for Grade M7 & above having membership of the National Construction Contractors Association of Sri Lanka (NCCASL).
5. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairman. Department Tender Board, Department of Buildings,'Sethsiripaya', Sri Jayawardenapura, Kotte, Battaramulla to receive before closing time.
6. Tender documents may be inspected free of charge, and any further details could be obtained from the Chief Engineer (Northern Division)., Department of Buldings, No. 46, Somasundaram Lane, Jaffna.

**Item of work**

1. Construction of Divisional Secretary's Office, Tellipalai Stage I
2. Construction of Divisional Secretary's Office, Chankanai Stage I
3. Construction of Divisional Secretary's Office, Kopay Stage I
4. Construction of 04 Nos Class Rooms & Internal Roads for Ramanathan Academy of Fine Arts, University of Jaffna.

T. M. W Gunasekara
Director of Buildings,
Department of Buildings.

'Sethsiripaya'
Sri Jayawardenapura, Kotte,
Battaramulla.

(C/4601)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணிவரை நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று புதன்கிழமை ஆர். கேதீஸ்வரன். கே. செல்வரத்தினம் ஆகியோரின் நாதஸ்வர இசையும்—

ரீ. உதயசங்கர். கே. சிவகுமார். கே. நித்தியானந்தம், என். ஆர். எஸ். ரவீந்திரன் ஆகியோரின் தவில் கச்சேரியும் இடம் பெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (இ-8-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் உற்சவத்தையொட்டி சிவ. வை. நித்தியானந்த சர்மா முத்துவிநாயகர் ஆலயத்தில் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்திவரும் இராமாயணச் சொற்பொழிவுத் தொடரில் இன்று புதன் கிழமை "இன்று போய் நாளை வா" என்ற தலைப்பில் பிரசங்கம் நடைபெறும். (இ-8-4)

★ ★ ★

வட பிராந்திய இந்துப் பேரவையின் ஆதரவில், நல்லூர் கந்தசுவாமிகோயில் உற்சவத்தை முன்னிட்டு அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் பிரம்மஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மா அவர்களின் "மகாபாரத முத்துக்கள்" எனும் பொருளிலான தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்றுபுதன் கிழமை "கீதையின்தோற்றம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

க. நவரத்தினத்தின் திருமுறை ஓதலுடன் நிகழ்வு ஆரம்பமாகும். (இ-ரி)


## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
2 ஆவது வெற்றி வாரமாக
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த

**பாட்ஷா**

திரைப்படக் கூட்டுத்தாபன (ரீலஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58488)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இறுதி வாரமாக
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த

**முதல் மரியாதை**

25 - 08 - 98 முதல்
ரஜனி, மீனா
சரத்பாபு நடித்த

**முத்து**

10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4560)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று
விஜய், சுவலட்சுமி,
சார்லி, சங்கவி நடித்த

**நிலாவே வா**

(புதிய வெளியீடு)
அடுத்த வெளியீடு
அஜித்குமார், கார்த்திக்
ரோஜா, மணிவண்ணன்
உன்னிடத்தில்
என்னைக் கொடுத்தேன்
(புத்தம் புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(புதிய நேரம்)
Tele. No. 070-212223
(58486)


# மரண அறிவித்தல்கள்

## செல்வன் பவளகாந்தன் விஷ்ணுராஜ்

(மாணவன் தொழில் நுட்பக் கல்லூரி)

உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியைச் சேர்ந்த செல்வன் பவளகாந்தன் விஷ்ணுராஜ் (வினோ)நேற்று (18—08—98) அகால மரணமானார்.

அன்னார் இலங்கைநாதன் பவளகாந்தன்—பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியம், நாகம்மா ஆகியோரின் பேரனும் தவராசா, பகீரதன், கீதாஞ்சலி (லலிதா யுவலறி), லலிதா, விக்கினேஸ்வரன், மதீஸ் ஆகியோரின் சகோதரனும் இராசரெத்தினம், விஜயலட்சுமி, யோகேஸ்வரன் (கிராம அலுவலர் மண்கும்பான்) ஆகியோரின் அன்பு மருமகனும் இந்திரசித்து, மகாலட்சுமி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-08-98) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3. 00 மணியளவில் பூதவுடல் உரும்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ப. தவராசா
(சகோதரன்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(58490)

## திருமதி சறோஜினி தேவி குலநாயகம்

அராலி தெற்கைச் சேர்ந்த திருமதி சறோஜினி தேவி குலநாயகம் (ஆசிரியை, அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலை) 15—08—98 சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் துன்னாலை தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குலநாயகம் (பிரதம எழுது வினைஞர், கணக்குப் பகுதி, யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும், ரஜிலதாவின் பாசமிகு தாயாரும், திரு. திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், விஜயகுமார், பாலகுமார், நந்தகுமார், கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அராலி தெற்கு, உப தபாற் கந்தோர் வீதி, இல்லத்தில் நாளை (20—08—98) வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வே. குலநாயகம்
(கணவர்)

(58489)

## மரியநாயகம் கிறிசாந்துஸ்

தாளையடியை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் கிறிசாந்துஸ் (இளைப்பாறிய காணிக் கச்சேரிப் பதிவாளர்) 17- 8- 98 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற மரியநாயகம் திருமதி ம. அந்தோனியா ஆகியோரின் அன்புப் புதல்வனும், ராணியின் அன்புக் கணவரும், ராஜ்மோகன் (பிரான்ஸ்) என்பவரின் அன்புத் தந்தையாரும், எக்பேட் (கனடா), றிசா செபமாலை, அன்ரன்றிச், அல்பேட் (கனடா), வைலெற்ராஜரட்ணம் (லண்டன்), டெய்சி மரியதாஸ், ஆகியோரின் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. J: மரியதாஸ் (I.P.T.)
(மைத்துனன்)

34, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.

(58473)

## திருமதி பாண்டியன் மோனசிறி

காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாண்டியன் மோனசிறி 17-08-1998 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் உமாதேவியின் (உமா ஸ்ரோர்ஸ் வவுனியா) அன்புப் புதல்வியும், பாண்டியனின் அன்பு மனைவியும், கௌரிசங்கர், தர்ஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனதாஸ், அம்பிகைபாகன், காலஞ்சென்ற மோகனராணி, அம்பிகா, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலுப்பிள்ளை — மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும், மலர்விழி, செந்தாமரை, சண்டிகா, காலஞ்சென்ற கேதீஸ்வரி, தயாளன், யோகசுதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-08-98) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வேலுப்பிள்ளை பாண்டியன் (கணவன்)
(உரிமையாளர்; சுதன் வெதுப்பகம், சுன்னாகம்)

(சி/4606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனிக்கா லூயின்ஸ்கியுடன் முறைகேடான உறவுகளை வைத்திருந்ததை அதிபர் கிளின்ரன் ஒப்புக்கொண்டுள்ளார்



வாஷிங்டன், ஓக, 19

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணியாளர் மொனீக்கா லூயின்ஸ்கியுடன் தாம் முறைகேடான பாலுறவு வைத்திருந்ததை அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் ஒப்புக்கொண்டுள்ளார். எனினும்தாம் பொய் கூறவல்லை என்று கிளின்ரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜூரர் சபையின் முன்னால் சுமார் நான்கு மணிநேரத்துக்கும் அதிகமாக நடைபெற்ற விசாரணையில் தனிப்பட்ட வழக்கறிஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு கிளின்ரன் பதில் அளித்தார்,

அப்பொழுதே மொனிக்கா லுயின்சியுடன் முறைகேடான பாலுறவு வைத்திருந்ததை கிளின்ரன் ஒப்புக்கொண்டார்.


கிளின்ரன் ஒளிவுமறைவின்றி உண்மையாக சாட்சியளித்தார் என அவரது வழக்கறிஞர்கள் பின்னர் தெரிவித்தனர்.

ஜூரர் சபையின் விசாரணையின் பின் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் கிளின்ரன் உரையாற்றினார்.

தனது மனைவி உட்பட அமெரிக்க நாட்டு மக்களை தவறாக தாம் வழி நடத்திச் சென்றிருப்பதாகவும் நடந்த சம்பவத்துக்கான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் — கிளின்ரன் கூறினார்.

தனது குடும்பத்தைக் காக்கவும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவுமே தாம் வாக்கு மூலம் அளித்ததாகவும் கிளின்ரன் தெரிவித்தார்.

இதே சமயம் மொனீக்கா லூயின்ஸ்கியுடன் கிளின்ரன் புறத்தொடர்பு வைத்திருந்தாரா? அது பற்றி பிரமாண வாக்குமூலத்தில் பொய் கூறினாரா? அல்லது அது பற்றிப் பொய் கூறுமாறு எவரையும் தூண்டினாரா? எனக் கண்டறிய முயன்று வரும் தனிபுலனாய்வாளர் கெனத்ஸ்ரார் அதிபர் மாளிகையில் வைத்துகிளின்ரனை குறுக்கு விசாரணை செய்த போதிலும் அது பற்றி எதுவித கருத்தும் கிளின்ரன் தெரிவிக்கவில்லை.



கிளின்ரன்இன்று தனது 52 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய பெரிய சிக்கலான நிலைமை உருவாகியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

# பாதுகாப்பு கருதி பாகிஸ்தானிலிருந்து அமெரிக்கர்கள் வெளியேறுகின்றனர்!

## குண்டுத் தாக்குதல் குறித்து அச்சம்

இஸ்லாமாபாத், ஓக. 19

பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேறத் தொடங்கி உள்ளனர்.

இவர்கள் வெளியேறுவதற்கு உதவ அமெரிக்கா மேலும் சில விமானங்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது அலுவலகத்தில் உள்ள அமெரிக்கர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டுள்ளது.

அவசியமாக இருக்க வேண்டியவர்களைத் தவிர ஏனையோரை பாகிஸ்தானை விட்டு வெளியேறுமாறும்— மற்றைய அமெரிக்க குடிமக்கள் பாகிஸ்தானுக்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறும் — கேட்டுக் கொண்டுள்ளது.

இதனை அடுத்தே அமெரிக்கர்கள் பாகிஸ்தானில் இருந்து வெளியேறுகின்றனர்.

இதே வேளை பாகிஸ்தானில் உள்ள எல்லா அமெரிக்க நிறுவனங்களிலும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்கர்களை வெளியேற்றுவதற்கான காரணத்தை அமெரிக்கா இன்னும் உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளான கென்யா, தன்ஸானியா ஆகியவற்றில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களே இதற்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

தாக்குதலுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானிலும் குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

இதேவேளை அமெரிக்கர்களின் இந்த நடவடிக்கை தேவையற்றது என பாகிஸ்தானின் மூத்த அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (இ-8-ரி)

## ஹர்த்தால்

புதுடில்லி, ஓக. 19

பீஹார் மாநிலத்தில் உள்ள சீத்தாவ ாடிப் பகுதியில் வெள்ள நிவாரணம் கோரியவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை ஆட்சேபித்து நேற்று இம் மாநில எதிர்க்கட்சிகள் ஹர்த்தால் அனுஷ்டித்தன.

இதேவேளை பீஹாரில் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 161 ஆக உயர்ந்துள்ளது. (இ-ரி)

## மெடலின் கென்யா விஜயம்

வாஷிங்டன், ஓக. 19

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திருமதி மெடலின் ஆல்பிரைட் நேற்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு கென்யா, தன்சானியா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான இடங்களை அவர் பார்வையிடுவதுடன், இச்சம்பவங்களின் போது காயமடைந்தவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை இந்த இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்யும் முகமாக இந்த இரு நாடுகளுக்கும் அமெரிக்கா வழங்க உள்ள உதவிகள் தொடர்பான தகவல்களையும் அவர் வெளியிடுவார் என எதிர் பார்க்கப்படுகின்றது. (இ-ரி)

உலக அரங்கில்

# ரஷ்யநாணயமானரூபிளின் மதிப்பு பெருமளவு குறைப்பு

## இந்தியாவுக்கும் பெரும் பாதிப்பு

மொஸ்கோ, ஓக. 19

ரஷ்யா தனது நாணயமான ரூபிளின் மதிப்பை பாதுகாக்கும் முயற்சியைக் கைவிட்டு டொலருக்கு எதிராக அதன் மதிப்பு வீழ்வதை அனுமதிக்கும் வண்ணம் தனது தற்போதைய கொள்கையில் பெரும் மாறுதல்களை மேற்கொண்டுள்ளது.

ரூபிளின் மதிப்பை பாதுகாக்கும் கட்டுப்பாடுகளை விலக்கிக்கொண்ட ரஷ்ய மத்திய வங்கி ரூபிளின் மதிப்பு தினசரி சந்தை வணிகத்தில் நிர்ணயிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

மொஸ்கோ சந்தைகளில் ரூபிளின் மதிப்பு 12 சதவீதத்தால் குறைந்துள்ளது. இதனால் ரஷ்யர்கள் டொலர்களை வாங்க வங்கிகளின் முன் நிற்கின்றனர்,

இதேவேளை ரஷ்ய அரசு தனது வெளிநாட்டுக் கடன்களை ரூபிளின் மூலம்செலுத்துவதை 90 நாள்களுக்கு நிறுத்தி வைக்கப் போவதாக அறிவித்துள்ளது, இதனால் உலக வங்கியின் பிரதிநிதி குழு ஒன்று அவசரமாக ரஷ்யாவுக்கு வரவுள்ளது.

அதிபர் யெல்ட்ஸின் தனதுவிடுமுறையை பாதியில் நிறுத்திக்கொண்டு மொஸ்கோ திரும்பி தற்போதைய நெருக்கடி நிலைமை குறித்து தனது சகாக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

நாட்டின் பொருளாதாரத்துறை அமைச்சர் அலெக்ஸ்ஷாண்டர் லிவின்சிக் இந்த நிலைக்கு தானும் ஓரளவு காரணம் எனக் கூறி இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

அதேசமயம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசேட கூட்டத்தை நடத்தப்போவதாக நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபை அறிவித்துள்ளது.

இக்கூட்டத்திற்கு அதிபர் யெல்ட்ஸினும் அழைக்கப்படுவார்,

அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபை தாமதப்படுத்தி வந்தது.

சிக்கன நடவடிக்கைகள் சமூக அமைதியின்மையை ஏற்படுத்தும் என்று கீழ்ச்சபையில் பெரும்பான்மையாக உள்ள கம்யூனிஸ்ட்டுக்கள் கருதுகின்றனர்.


ரூபிளின் மதிப்புக் குறைக்கப்பட்டிருப்பினும்இந்தியாவின் வர்த்தகத்திலும், பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துமென்று இந்திய மத்திய நிதிஅமைச்சர் ஜஸ்வத்சின்கா தெரிவித்தார்.

ரஷ்யா இந்தியாவுக்கு மிகவும் முக்கியமான வர்த்தக கூட்டாளி நாடு என்பதால் ரூபிளின் மதிப்புக் குறைக்கப்பட்டது இந்தியாவின் பொருளாதாரத்தை மிகவும்பாதிக்குமென்று பெங்களூரில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான கூட்டரசு பொருளாதார சீர்திருத்தங்களை விரைந்து செயற்படுத்துகின்றது என்றும், அடுத்த மாதத்திலிருந்து பொருளாதாரம் மேம்படத் தொடங்குமென்றும்- ஜஸ்வத்சின்கா நம்பிக்கை தெரிவித்தார்.

[illegible] கிளையும் நடவடிக்கையை சிந்திக்காமல் அரசு விரைந்து நடவடிக்கைச் மேற்கொள்ளாது என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமீபத்தில் நைரோபியில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கட்டடம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது அல்லவா? இதனை ஆட்சேபித்துக் கென்ய மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அமெரிக்கர்களுக்கு எதிரான போராட்டத்தை அமெரிக்காவில் வைத்து நடத்துமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

# தெற்கு லெபனானில் இஸ்ரேல் குண்டு வீச்சு

டெல்அவில், ஓக. 19

இஸ்ரேல் விமானப்படை விமானங்கள் நேற்று முன்தினம் தெற்கு லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா கெரில்லாக்களின் நிலைகள் மீது குண்டுகளை வீசின.

சிடானுக்கு 15 கிலோ மீற்றர் தென் கிழக்கே ஒரு கிராமத்தின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் 4 ஏவுகணைகளைச் செலுத்தியதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவரும் தாக்குதல் நடத்தப்பட்டதை ஒப்புக் கொண்டுள்ளார்.

அதேவேளை விமானங்கள் பயங்கரவாதிகளின் இருப்பிடங்களையே தாக்கின என்று அவர் கூறினார். (இ-8-ரி)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

11 அடி நீளம் உடைய நகைக்கடை, புடைவைக் கடைகளுக்கு உரிய 1 சோடி கண்ணாடி அலுமாரி நாதன் நகைத் தொழிலகம் 72, K. K. S வீதி, சுன்னாகத்தில் விற்பனைக்குண்டு. [25 க்கு முன் தொடர்பு கொள்ள வும்]. (58323]

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் கச்சேரி நல்லூர் றோட் நாயன்மார் வீதியில் அமைந்துள்ள மின்சாரம், குழாய்நீர் முதலிய சகல வசதிகளும் உடைய விசாலமான வீடும் அருகிலுள்ள சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. இரத்தினதுரை, இல. 9, நாயன்மார்வீதி, நல்லூர் (584542)

### தேவை

தென்னந்தோட்ட பராமரிப்பு அனுபவமுள்ள 2 குடும்பங்கள் பளையில் உள்ள தோட்டத்திற்கு உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி- செ. பதிமநாதன் 26, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். ( 58468)

### திருமண சேவை

சாயி மங்கள திருமண சேவை பல ஆண்டு காலமாக உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் திருமணங்களை நிறைவேற்றி முன்னோடியாக விளங்குகின்றது. உங்களுக்கு மணமகள், மணமகன் தேவைப் படின்சாதகக்குறிப்பு, குடும்ப விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். V. மகேந்திரன் 27, இராஜ சிங்கா றோட், வெள்ளவத்தை, Colombo-06. (58367)

PERSONAL CLASSES
PHYSICS (A/L 99)
PAPER CLASSES
திரு. ம. ஸ்பெல்மன்
ஆரம்பம்: 19 - 08 - 98
(புதன் 4.00 P. M.)
தொடர்பு:-
18, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
அல்லது
NEWTON
கல்வி நிலையம்
ஆரியகுளம் அருகில்.
(58478)

வலி. கிழக்கு தென்பகுதி

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

இரண்டு சில்லு உழவு இயந்திரக்கலப்பை,
லொறி ரயர்

## விற்பனைக்கான கூறுவிலை

மேற்படி சங்கத்தில் கீழ்க்காணும் பொருள்கள் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. கூறுவிலை ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி 28 - 08 - 98. பொருள்களை சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். கூறுவிலைகள், பொது முகாமையாளர், வலி - கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்புவதுடன் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கலப்பை, ரயர் கூறுவிலை எனக்குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பாவிக்கப்பட்டு கழிக்கப்பட்ட லொறி ரயர்
2. கலப்பை.

- பொது முகாமையாளர்

நீர்வேலி.
98 - 08 - 14 (சி-4600)

# 'கிரவல்' வீதிகளை திருத்த ரூ. 9 கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். குடாவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 220 மைல் நீளமான கிரவல் வீதிகளை திருத்துவதற்கு 8 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை, வல்வெட்டித்துறை நகர சபை போன்றவற்றுடன் ஏனைய 12 பிரதேசசபைகளிலுமுள்ள கிரவல் வீதிகள் திருத்தம் செய்யப்படவுள்ளன.

திருத்தப்படவேண்டிய வீதிகளின் எண்ணிக்கையை — பெயர்ப்பட்டியல்களை — அவற்றின் தனித்தனியான பெயர், நீளம் போன்ற விவரங்களைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறுவடக்கு —கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை கேட்டுள்ளார். (இ-5)

உ

## மங்களகரமான திறப்பு விழா

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 3 ஆம் நாள் இன்று (19-08.1998) புதன்கிழமை நண்பகல் 12-00மணிக்கு வரும் சுபமுகூர்த்த வேளையில்

## ஜோன் ஸ்ருடியோ

(கறுப்பு வெள்ளை, கலர்ப்படங்கள், திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்குமான படப்பிடிப்பாளர்கள்)

பிரதான வீதி, அச்சுவேலி

என்ற முகவரியில் திறந்து வைக்கப்படுகின்றது. எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜ. J. ஆன்குலாஸ்

(58484)

# பத்தொன்பதாவது நினைவஞ்சலி

தோற்றம்
17
—
07
—
1913



மறைவு
20
—
08
—
1979

## அமரர் கார்த்திகேசு வைத்தியலிங்கம்

( உரிமையாளர் - வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம் )

பண்பின் உயர்விடமாய்
பாசத்தின் நிறைகுடமாய்;
பரிவுடனே எமை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர்!
அன்பின் திருவுருவே
ஆண்டு பல சென்றிடினும்
அப்பாவே நீர் எமக்கு
அணையாத தீபம் தான்!

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம், [58470]

# கண்ணீர் அஞ்சலி

எமது சித்த மருத்துவத்துறையின் விரிவுரையாளர்
டாக்டர் [திருமதி] சி. பஞ்சராஜா
அவர்களின் அன்புத் தாயார்


## திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச்செலுத்துவதுடன், அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
சித்த மருத்துவத்துறை
யா. பல்கலைக்கழகம்.

[58474]

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07-08-1953

உதிர்வு
24-08-1995

## அமரர் வன்னியசிங்கம் காசிலிங்கம்

(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
உப வேலைப் பரிசோதகர்)

திதி: 19 - 08 - 1998

அன்பும் பண்பும் உள்ள அன்புத் தெய்வமே!
மூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்களை
ஒவ்வொரு கணமும் நினைந்து உருகும்

அன்பு மனைவி புஸ்பவதி,
பிள்ளைகள்: கிருபாகரன்.
வருணி.
கிரிதரன்.

அல்வாய் மேற்கு,
திக்கம். (சி/4599)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் அழிந்ததற்கு அரசே பொறுப்பு!

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 19

கடலில் குறிப்பிட்ட தூரத்தில் கப்பல் செல்கிறதா? என்பதைக் கண்காணிக்க கடற்படையினர் தவறியுள்ளனர். இதனாலேயே 'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் பொருள்களுடன் அழிந்துபோனது. எனவே கப்பல் அழிந்ததற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி 'உதயனுக்கு' இவ்வாறு தெரிவித்தார்.

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கரையில் இருந்து 50 கடல் மைல் தொலைவிலேயே கப்பல்கள் பயணம் செய்ய வேண்டும் எனக் கடற்படையினர் பணித்துள்ளனர். அவ்வாறாயின் 'பிறின்ஸஸ் காஷ்' கப்பல் கரையில் இருந்து அரைமைல் தொலைவுக்குள் செல்லும் வரை கடற்படையினா என்ன செய்து கொண்டிருந்தனர்?

கப்பல் உரிய தூரத்தில் செல்கிறதா என்பதைக் கண்காணிக்க கடற்படையினர் தவறியுள்ளனர். எனவே கப்பல் பொருள்களுடன் அழிந்து போனதற்கு அரசே பொறுப்பேற்று பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும்— என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# விவசாயக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஒக. 19

விவசாய மக்களுக்குப் பயன்படக் கூடியதான கருத்தரங்கொன்று மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன அதிபர் த. குகதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ''யாழ். மாவட்டத்தில் குறைந்த உள்ளீட்டுச் செலவிலான பயிர்ச்செய்கைத் தொழில் நுட்பம்'' என்ற பொருளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தினரின் அனுசரணையுடன், இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தின் யாழ்ப்பாண திட்ட முகாமையாளர் இ. அருள் ஞானம், யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்), ரி. சிவயோகநாதன், ச. சின்னத்துரை (உதவி விவசாய பணிப்பாளர் - மாவட்ட பயிற்சி நிலையம்) மற்றும் கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த வ. கதிரைமலை, செல்வி சாருமதி சண்முக சுந்தரம், சி. சிறீதரன், மு. கந்தசாமி (விரிவுரையாளர் யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவனம்) ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பலரும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

(இ-152)

### அவசரகாலச்சட்டம் நீடிப்பு:

# அரசுக்கு ஆதரவு அளிப்பதை ஈ.பி.டி.பி மறுபரிசீலனை

கொழும்பு, ஒக. 19

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதை மறுபரிசீலனை செய்யவிருப்பதாக ஈ. பி. டி. பி. அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது ஈ. பி. டி. பி அமைப்பு அரசுடன் சேர்ந்து வாக்களித்து வருவது தெரிந்ததே.

இது தொடர்பாக கட்சி வட்டாரத்தில் விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும்—

இந்த விடயத்தை மறுபரிசீலனை செய்து அதற்கு எதிராக வாக்களிப்பது தொடர்பான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்றும்— ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி. தவிர்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகள் அவசரகால நீடிப்புக்கு எதிராக வாக்களித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# 200 குடும்பங்களுக்கு ரூ. 25,000 கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, ஒக. 19

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் சேதமடைந்த வீட்டு உரிமையாளர்கள் 200 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வரையான கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவுக் கிராம சேவகர்களால் தெரிவு செய்யப்பட்ட மேற்படி 200 குடும்பங்களுக்கும் பணத்தொகை கட்டம் கட்டமாக வழங்கப்படுமென செயலக நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.

(இ-152)

# மட்டக்களப்பில் மூவர் கைது

மட்டக்களப்பு, ஒக. 19

மட்டக்களப்பில் கராஜ் உரிமையாளர் ஒருவர் உட்பட மூவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேச பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்தே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் பாவனைக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கினார்கள் என இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

(ஐ-21-9)

# 252 பேரில் 164 பேருக்கு கண்களில் பாதிப்பு

தென்மராட்சி, ஒக. 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மிருசுவில் வைத்தியசாலையில் நடத்தப்பட்ட தவசிக்குளம் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனை செய்யப்பட்ட 252 பேரில் 164 பேருக்குக் கண்களில் பாதிப்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்களில் 19 பேருக்கு விழி வெண்படலத்தில் பூப் படர்ந்திருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது.

மூக்குக் கண்ணாடி பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்டோரில் 100 பேருக்கு இன்னும் இரண்டு வாரங்களில் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக லயன் செ. கா. நவரத்தினம் தெரிவித்தார்.

(இ-117)

# கணக்காளர்

வலிகாமம் தெற்கு, ஒக. 18

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு நிரந்தரமான கணக்காளராக என். இராஜநாயகம் என்பவர் இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ-152)

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

திருநெல்வேலி, ஒக. 19

நாவற்குழி, தச்சன் தோப்பு ஆகிய இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பன இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கசிப்பு அருந்தி உடல் நலம்பாதிக்கப்பட்ட சிலர் கைதடி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(இ-135)

# கிராம உத்தியோகத்தர் தெரிவு

யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தில் க. சிவராசா தலைமையிலான புதிய நடப்பாண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(இ-86)

### வவுனியாவில்

# எரிபொருள் கட்டுப்பாட்டைத் தீர்க்க ஈ. பி. ஆர். எல். எவ். கோருகின்றது!

## ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஒக. 19

வவுனியாவில் தற்பொழுது அமுல் செய்யப்பட்டு வரும் எரிபொருள் பங்கீட்டு முறை அர்த்தமற்றது. இதனை உடனடியாக நீக்கவேண்டும்.

மேற்கண்டவாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கடிதத்தின் விவரம் வருமாறு:-

1990ஆம் ஆண்டிலிருந்து வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்றது. 1990இலிருந்து 1995 வரை இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் மக்களின் நடமாட்டத்திற்கோ அல்லது பொருள்களை வாங்கவோ விற்கவோ எந்தத் தடைகளோ, கட்டுப்பாடுகளோ இருந்ததில்லை.

ஆனால் 1995-க்கு பிற்பாடு வவுனியா பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்வதே கடினம் என்ற சூழ்நிலைக்கு பல்வேறுபட்ட கட்டுப்பாடுகள் பாதுகாப்பு அமைச்சால் விதிக்கப்பட்டு வருகின்றன.

வன்னியின் ஏனைய பிரதேசங்களில் இருந்து வவுனியாவுக்கு வந்து போவதில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளால் பலர் மருத்துவ வசதி இன்றி இறக்க நேரிட்டது, பலர் நேர்முகப் பரீட்சைகளில் கலந்து கொள்ள முடியாமல் தமது வேலை வாய்ப்பைஇழக்கநேரிட்டது.

பல மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடர முடியாமலும், பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமலும் போனது. இவற்றிற்கு மேலாக, வவுனியா மக்களின் பெரும் பகுதி நேரம் 'பாஸ்' எடுப்பதற்காக இங்கும் அங்கும் அலைவதிலேயே செலவாகின்றது.

கடந்த ஆகஸ்ட் 6 ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் பெற்றுக்கொள்ளவும் அரசு பங்கீட்டு முறையை அறிமுகப் படுத்தியுள்ளது. இதனால் சகல பொது மக்களும் இராணுவம், பொலீஸ், கச்சேரி என்று அலையும் நிலைதான் உருவாகி வருகின்றது.

ஏற்கனவே, பாஸ் வழங்குவதில் இலட்சக்கணக்காகச் சம்பாதித்த பாதுகாப்புப் படையினர், எரிபொருளுக்கு பாஸ் வழங்குவதிலும் பல இலட்சங்களை சம்பாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

புலிகளுக்கு எரிபொருள் போவதை தடைசெய்வதற்காகவே இப்பங்கீட்டு முறையென பாதுகாப்பு அமைச்சு கூறும் விளக்கமானது மிகவும் கேலிக்குரியதும், குழந்தைப் பிள்ளைத்தனமானதுமாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஓடும் எந்த வாகனமும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குச் செல்வதில்லை. வன்னிக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்லும் லொறிகள் மாத்திரமே, இராணுவத்தினதும் அரச அதிபரதும் அனுமதியுடன் சென்று வருகின்றன. தேவை ஏற்படின் அதற்கான டீசலைக் கட்டுப்படுத்தலாம். அதனைவிடுத்து முழுமையாகப் பங்கீட்டு முறையை அமுல்படுத்துவதானது தோட்டங்களுக்கு நீரிறைக்கும் விவசாயிகள் கடைகளில் சிறிய ஜெனரேட்டர்கள் வைத்திருப்போர் உட்பட சகல வாகன உரிமையாளர்களையும் பாதித்துள்ளது.

இதனால் பொருள்கள் விலையேற்றம் உட்பட வவுனியாவில் இருக்கக் கூடிய அரைகுறைப் பொருளாதாரமும் பாதிக்கப்படும் என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் ஓடும் வாகனங்களில் மிகப் பெரும்பாலானவை மண்எண்ணெயிலேயே ஓடுகின்றன. இதைவிட புலிகளுக்குத் தேவையான டீசல், பெற்றோல் தேவையான அளவில் இந்தியாவில் இருந்து இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. இவை நீங்கள் உட்பட எல்லோரும் அறிந்த விடயங்களே. இவற்றை அறிந்தும் கூட தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான கட்டுப்பாடுகளை விதிப்பதானது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்றதே.

எனவே இந்த அர்த்தமற்ற, அநாவசியமான எரிபொருள் பங்கீட்டு முறையை உடனடியாக நீக்கிக் கொள்ளும்படி வவுனியா வாழ் தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

(இ)


# கண்ணீர் அஞ்சலி

சங்கானைக் கல்விக்கோட்டத்தினைச் சார்ந்த அராலி கிழக்கு அ. மி. த. க பாடசாலைஆசிரியை

## திருமதி சறோஜினிதேவி குலநாயகம்

அவர்களின் திடீர் மரணத்தையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், நலன்புரிச் சங்கம்,
கோட்டக்கல்வி பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும், கல்விக்
கோட்ட ஆசிரியர்களும்.

சங்கானைக் கல்விக்
கோட்டம்.

(58469)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய விஞ்ஞான ஆசிரியை

## திருமதி சறோஜினிதேவி குலநாயகம்

அவர்கள் 16-08-98 இல் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.


ஆறாத் துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அராலி கிழக்கு
அ. மி. த. க. பாடசாலை,
வட்டுக்கோட்டை.

(58467)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்திற்கு,
கொக்குவில் மேற்கு

வைத்திய கலாநிதி

## பொன்னம்பலம் சொர்ணலிங்கம்

''டபிள் றீட்ஸ்' ஆர்மோனியம்

ஒன்றை கழகச் செயலாளர்
செல்லையா மெற்றாஸ்மயிலிடம்
அன்பளிப்புச் செய்ததற்கு நன்றி கூறுகின்றோம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

(58459)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 | | 10 |
| — | | — |
| 08 |  | 09 |
| — | | — |
| 1942 | | 1996 |

திருமதி

## பாக்கியம் சிற்றம்பலம்

அன்பென்னும் உருவொன்று அன்னையாய்
வடிவெடுத்து
பண்போடு பாசத்தையும் பரிவுடன் ஊட்டிவிட்டு
கண்போன்ற கல்வியைக் கற்றறிவித்த தாயே!
விண்ணுலகம் சென்று இன்று ஈராண்டு ஆனதம்மா
விடிவெள்ளியாய் நின்று என்றும் வழிகாட்டுவாய்.

ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

—குடும்பத்தினர்

மாலிசந்தை,
துன்னாலை தெற்கு.

(58365)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 | | 20 |
| — | | — |
| 05 |  | 07 |
| — | | — |
| 1946 | | 1998 |

## திருமதி சிவபாதசுந்தரம் கமலாம்பிகை

(சின்னமணி)

அன்னாரின் நினைவஞ்சலியும் அத்தியேட்டிக் கிரியைகளும் 19—08—98 புதன்கிழமை நிகழ இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் சமுகந்தந்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தந்தை, கணவன், பிள்ளைகள்.

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

(58356)

# மெய்வன்மை போட்டி

தென்மராட்சி, ஒக. 19

மறவன்புலோ மேற்கு சனசமூக நிலைய பாலர் பாடசாலைச் சிறுவர்களின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நிலைய மைதானத்தில் சனசமூக நிலைய தலைவர் மா. லீலா வினோதன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக சர்வோதய செயற்திட்ட அத்தியட்சகர் எஸ். வி. சங்கரப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராஜசேகரமும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

# விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக. 19

கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தவர் தடக்கி விழுந்து தலையில் படுகாயமடைந்தார்.

உடுவில், மல்வம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகசிங்கம் இறைமன் (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

# திறந்து கிடக்கும் தபாற்பெட்டி

வலி.மேற்கு, ஒக. 19

சித்தன்கேணிச் சந்தியிலுள்ள தபாற் பெட்டி கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகப் பூட்டு இன்றிக் கிடக்கிறது.

இதனால் பொது மக்கள் கடிதங்களைப் போட முடியாமல் அவதிப்படுகின்றனர்.

இந்தத் தபாற்பெட்டி வன்செயலின்போது சேதமடைந்தமையினால் திருத்தியமைக்கப்பட்டு வர்ணமும் பூசப்பட்டுள்ளது.

ஆனால் பூட்டு ஒன்றுதான் புதிதாகப் போடப்பட வேண்டும். பூட்டுப் போடுவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என்று மக்கள் கேட்கின்றனர்.

(இ – 175)

# மிதிவெடியில் சிக்கி இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 19

கட்டைப்பிராய், சின்னக் கோயில் வீதியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரது வலதுகால் பாதம் துண்டிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த வாமதேவன் விஜயகுமார் (வயது 21) என்பவரே பாதம் துண்டிக்கப்பட்டவராவார். இவருடன் கூடச் சென்ற ஞானையா தேவறஞ்சன் (வயது 24) என்பவரே மற்றைய காயமடைந்தவராவார்.

கிடுகு வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை, மோட்டார் சைக்கிள் திடீரெனச் சறுக்கி பாதையோரம் சென்றதால் காலை ஊன்றியபோது மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.


# பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை – தபாவில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
[illegible]

(58453)



விற்பனையில் சலுகை!

# ராகம்ஸ் பட்டுச்சோலையின் நல்லூர் தேர், தீர்த்தோற்சவ மலிவு விற்பனை

யாழ். நகரிலேயே பிரசித்தி பெற்ற
ராகம்ஸ் பட்டுச்சோலை ஸ்தாபனத்தார்

தமது வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்களின் நலன்கருதி பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட தரம்மிக்க வர்ண வர்ண புத்தம் புதிய அனைத்து ஜவுளி வகைகளும் மலிவு விலையில் விற்பனை செய்கின்றார்கள்.

முந்துங்கள்! உங்கள் தெரிவுக்கு!!

## ராகம்ஸ் பட்டுச்சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
ஆலய முன்வீதி முன்பாக, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி/4589)


# கண்ணீர் அஞ்சலி

எமது உடுவில் / தெல்லிப்பழை
கிளையைச் சேர்ந்த
சுதன் பேக்கரி உரிமையாளர்
திரு. வே. பாண்டியன் அவர்களின்
துணைவியார்

## திருமதி பா. மோகனசிறி


அவர்களின் மரணச்செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ், மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/4595)

# 31 -ம் நாள் நினைவஞ்சலி



## கந்தர் செல்லத்துரை

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1930 - 11 - 27 | 1998 - 07 - 20 |

அன்பின் இலக்கணமாய் குடும்பத்தின்
ஒளி விளக்காய் நின்று பாசமுடன்
பரிவு காட்டி வளர்த்து எங்களை
வாழவைத்து விட்டு மீளாப்பயணம்
சென்ற எங்கள் அன்புத் தெய்வமே!
தங்கள் பிரிவுத்துயர் என்றும் ஆறாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காட்டு மலை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிச் கிரியைகள் இன்று
19 – 08 – 1998 புதன்கிழமை நடைபெறும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு.

(58435)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பதுக்கல் வேண்டாம்!

சூடாநாட்டு வர்த்தகர்களில் ஒரு சாரார் தமக்குக் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள்களை இழந்து தாங்கொணாத் துயரத்துக்கு ஆளாகி அவலப்படுகின்றனர். அரசிடம் நஷ்டஈடு கோரிப்போராடுகின்றனர். அவர்களின் அந்தக் கோரிக்கையை குடாநாட்டு மக்கள் ஆதரிக்கின்றனர். அவர்களுக்கு நேர்ந்த கதி குறித்து அனுதாபமும் கொண்டுள்ளனர்.

ஆனால் வர்த்தகர் சமூகத்தைச் சேர்ந்த சிலர்— பாதிக்கப்படாத வர்த்தகர்களில் சிறு எண்ணிக்கையானோர்— சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொருள்களுக்குச் செயற்கைக் கட்டுப்பாட்டை உண்டாக்கி மக்களிடம் சூறையாடுகிறார்கள்.

கொழும்பில் குண்டு வெடித்தால் அல்லது கப்பல் விபத்துக்கு உள்ளாகினால், அந்தச் செய்தி இங்கு கிடைத்த மறுகணமே, கைவசம் இருந்த இருப்புகளை ஒளித்து — பதுக்கல் செய்து — கொள்ளை லாபம் அடிப்பது, போர்க்காலச் சூழ்நிலை தோன்றிய பின்னர் குடாநாட்டு வர்த்தகர்களுக்கு வழக்கமாகி விட்டது.

பதுக்கல். கொள்ளை லாபம், அதிக விலை ஆகியன யாழ்ப்பாண மக்கள் அடிக்கடி முகங்கொடுக்கும் முக்கிய பிரச்சினைகளாகும். யாழ்ப்பாணத்திலோ அல்லது கொழும்பிலோ அசம்பாவிதம் எதுவும் நடைபெற்று விட்டால் பாவனைப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் திடீரெனக் காணாமற் போய் விடும்; கடைகளில் பொருள்கள் கையிருப்பில் இருக்கா; எவ்வித நியாய உணர்வுமின்றிப் பதுக்கல் நடைபெறும். அதன் பின்னர் கொள்ளை லாபம் ஓங்கும்.

வர்த்தகம் மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடையது. அது ஒருவகை சேவையுமாகும்.

இதனைச் சிறிதும் உணராமல் குடாநாட்டு வர்த்தகர்கள் பதுக்கல் செய்வதிலும் கொள்ளை இலாபம் அடிப்பதிலும் எவ்வித தடங்கலும் இன்றி கூச்சமும், குற்ற உணர்வும் இன்றி ஈடுபடுகிறார்கள்.

இந்தப் பாதகச் செயலைப் புரியும் வர்த்தகர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் பதுக்கல், கொள்ளை இலாபம் ஆகியவற்றைக் கண்காணிக்கவும், குற்றம் செய்வோரை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் சென்று தண்டிக்கவும் உகந்த வகையில் பொலீஸார் இங்கு செயற்படவில்லை.

சந்தர்ப்பம் பார்த்துத் தவித்த முயல் அடிக்கும் இந்தப் பழக்கத்தை வர்த்தகர்கள் தொடர்ந்தால் மக்கள் வர்த்தகர்களுக்கு எதிராகக் கிளம்புவது தவிர்க்க முடியாததாகி விடும்.

குட்டக் குட்டக் குனிவதற்கும் ஓர் அளவு உண்டு பதுக்கலும் கொள்ளை இலாபமும் இல்லாமற் செய்யப்படுவதற்கு வர்த்தகர்களின் ஒத்துழைப்பு த்தேவை. அவர்கள் மனம் திருந்தவேண்டும். இல்லையேல் திருத்தப்படவேண்டும்.

## லயன்ஸ் உறுப்பினரை கலந்துகொள்ள அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 19

நல்லூர், கோப்பாய் லயன்ஸ் கழகங்களால் பருத்தித்துறை வீதியில், பழைய பொலீஸ் நிலையத்துக்கு அருகில் நடத்தப்படும் இலவச நீரிழிவு மருத்துவப் பரிசோதனை முகாமில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லயன்ஸ் சீமாட்டிகள், லியோக்கள் ஆகியோரைக் கலந்து கொண்டு முகாம் செயற்பாடுகளுக்கு உதவுமாறும் —

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி லியோக்கள் அதிபர்களிடம் அனுமதி பெற்று சேவையாற்ற வருமாறும் —

நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் பா. தவபாலன் அழைப்பு விடுத்துள்ளார்.

(இ-8)

## யாழ். வருகை

வலி. மேற்கு, ஒக. 19

அனைத்துலக இந்துமத குரு பீடத்தின் ஆஸ்திரேலியப் பிரதிநிதி டாக்டர் சிவஸ்ரீ. நா. சோமஸ்கந்தக் குருக்கள் சுன்னாகம் வந்துள்ளார்.

(இ-175)

## உப்பள ஊழியர் சம்பள விவகாரம்

யாழ்ப்பாணம், ஒக. 19

''ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு 1996 ஆம் ஆண்டுக்கும் அதன் பிற்பட்ட காலத்திற்கும் ஒதுக்கீடும், கட்டு நிதியும் யாழ். செயலகத்திற்குக் கிடைக்கவில்லை. இதற்கான சம்பளப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடும் கட்டுநிதியும் கிடைத்தபின் சம்பளம் வழங்கப்படும்''.

மேற்கண்டவாறு இதற்குப் பொறுப்பான யாழ். செயலக அதிகாரி தெரிவித்தார்.

உப்பள ஊழியர்களுக்கு 1995 ஆம், 1996 ஆம் ஆண்டுகளுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை என்று கடந்த 16 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாக தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த அதிகாரி மேலும் கூறியதாவது:- திறைசேரியிலிருந்து 1995ஆம் ஆண்டுக்கு மட்டுமே எமக்கு ஒதுக்கீடும் கட்டுநிதியும் இச்சம்பளத்திற்காக வழங்கப்பட்டன.

உப்பள அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995ஆம் ஆண்டுக்குரிய சம்பளப் பட்டியலில் உள்ளவர்களில் 1998 பெப்ரவரியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 107 ஊழியர்களுக்கும் மே மாதம் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த 157 ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 264 ஊழியர்களுக்கு 1 கோடி 20 லட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத (இறந்த ஓய்வு பெற்ற ஊழியர்கள்), 28 ஊழியர்களுக்கு மட்டும் சம்பளம்வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

# சமய மற்றும் சமூக நெறிகளை பாதுகாப்பது இளைஞர் கடமையே!

## வெளியீட்டு விழாவில் ஆதீன முதல்வர்

சமய, சமூக நெறிகளைப் பேணிப் பாதுகாப்பது இன்றைய இளம் சமுதாயத்தினரின் தலையாய கடமையாகும். சமய நெறிகள், கோட்பாடுகளை இளம் சந்ததியினர் பின்பற்றி அவ்விதம் வாழப் பழக வேண்டும். தெய்வீக சிந்தனையும், தெய்வ வழிபாடும் இன்றைய காலகட்டத்தில் சகலருக்கும் தேவையானவை.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

யாழ். மாநகர சபையினர் தமது ஏனைய சேவைகளுடன் சுகாதாரம், உளச்சுகம், ஆத்மீக சுகம் ஆகியனவற்றுக்கும் மகத்தான சேவை செய்து வருகின்றனர், இக்கட்டான நிலையிலும் யாழ். மாநகரசபையினர் செய்து வரும் சமய, சமூகப் பணிகள் யாவும் சிறப்படைய வாழ்த்துகிறேன்— என்றும் ஆதீன முதல்வர் தெரிவித்தார்.

தலைவர் டாக்டர்இ.தெய்வேந்திரன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

விஞ்ஞானம் முன்னேறும் இன்றைய நிலையில் தெய்வம் ஒன்று இருக்கிறதா என்ற கேள்வி இளம் சமுதாயத்தினரிடம் உருவாகி வருவதை நாம் காண்கின்றோம். இந்த நிலையை நீக்குவதற்கு விஞ்ஞானம் எவ்வாறு சமய தத்துவங்களுடன் நெருக்கமுடையவை என்பதனை அவர்களுக்கு விளக்க வேண்டும். சமயக் கோட்பாடுகளைப் புதிய பார்வையுடன் பயிற்றுவிப்பது அவசியம்— என்றார். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தமது வாழ்த்துரையில் —

உள்ளத்தை வளம் படுத்துகின்ற பெரும்பணி ஆத்மீகத் துறை. இளம் சமுதாயத்தினரின் உள்ளத்தில் பக்தியும், புனிதமும், தெய்வீகமும் குடிகொள்ள வேண்டும் என்ற நல்நோக்குடன் வருடம் தோறும் உற்சவகாலங்களில் ''நல்லைக்குமரன்'' மலரை வெளியிட்டு வருகிறோம். இத்தகைய பிரசுரங்கள் மூலம் இளம்சந்ததியினரிடம் இறை பக்தி வேரூன்ற வாய்ப்பு உண்டாகும்—என்றார்.

ஆசிரியர் ஆறு. திருமுருகன் உரையாற்றுகையில் கூறியதாவது;-

இன்று மக்கள் எல்லோரும் பெரிய பாரத்தோடு திரியும் நிலை உருவாகி உள்ளது. இதனை அகற்ற தெய்வீக வழிபாடு, பிரார்த்தனை என்பன இன்றியமையாதவை. யாழ்ப்பாணம் யோகியரும், சித்தர்களும் வாழ்ந்த சிவபூமி இங்கு பசுவதை என்று அற்றுப் போகிறதோ அன்று தான் ஒருநல்ல விடிவு ஏற்படும். நல்லூர் ஒரு புனித பூமியாகும். இங்கு நல்லைக் குமரன் மலர் வெளியிடப்படுவது ஒரு தெய்வீகப் பணியாகும் என்றார்.

தர்மசாஸ்த குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் ஆசியுரையும், யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அ. சண்முகதாஸ் வெளியீட்டுரையும், இதழாசிரியர் ந. விஜயசுந்தரம் பதிலுரையும் நிகழ்த்தினர்.

(அ-30)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### சப்பற தரிசனம்

எடுப்பு

அப்பனுக் கறிவுரைத்த அழகனே குமரா நீ
சப்பறந் தனிலேறித் தரிசனம் தருவாயே
(அப்பனுக்...)

தொடுப்பு

ஒப்பிலை உனக்கிங்கே ஓராறு முகமூர்த்தி
கற்பனைக் கெட்டாத கந்தனே நீ வாராய்
(அப்பனுக். .)

முடிப்பு

இப்புவி மீதினில் எம்மிடை சூழுமிடர்
தப்புக்கள் எல்லாமே தானாயகன்று விட
சப்பறம் மீதமர்ந்து சண்முகா – நல்லை
அப்பனே வாராய் அருளினைத் தாராய்
(அப்பனுக்...)

- அனலையூர்ச் சேந்தன்


### வாழ்வளிப்பாய் முருகா!

சண்முக னேநினது சந்நிதியில் வந்துதொழச்
சஞ்சலங் கள்யாவுந் தீர்ந்திடுமே – ஐயா
(சண்முக)

மண்ணும்விண் ணும்போற்ற வாழ்வளிப்பாய் முருகா
மயில்வா கனத்தமர்ந்த வடிவேற் திருக்குமரா
(சண்முக)

ஏற்றமிகு வள்ளியுடன் தெய்வமா தும்பொருந்த
எழிலான நல்லூரில் அமர்ந்ததிருக் கோயிலிலே
போற்றிமிக வடியார்நின் பொற்பாதங்
கண்டுதொழப்
போகமனைத் துந்தருவாய் புண்ணியனே
உமை பாலா
(சண்முக)

- மட்டுவில் நம்பி



### நல்லூரான் திருவடியைப் பாடு!

பார் பார் பரமனை எங்கும்
பதையாதே சுகம் இதயத்தில் தங்கும்
ஆர் தான் உனக்கு நிகர் ஆவார்
ஐயப்படாதே தெய்வம் உன்னிடம் உண்டு.

நல்லூரான் திருவடியைப் பாடு
நாமே நாம் என்று சொல்லி நாடு
கல்லுங் கரையக் கவி சொல்லு
[illegible] வெல்லு.

- யோகர் சுவாமிகள்

## ஐ. நா. தூதரகம் ரூ.10 லட்சம் உதவி

யாழ்ப்பாணம், ஒக. 19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் 10 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதில் 5 இலட்சம் ரூபாவுக்கு சாவற் காட்டுப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவுள்ளது. மிகுதி 5 லட்சம் ரூபாவுக்கு பண்டத்தரிப்பு பிரான்பற்றில் நல்லெண்ணெய் வடிப்பதற்கான சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சி நடத்தப்படவுள்ளது.

(இ-15)

## விடைத்தாள் திருத்துவோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக. 19

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவதற்காக நாளை வியாழக்கிழமை கொழும்பில் கடமைக்கு சமுகமளிக்க வேண்டியவர்கள் இன்று புதன்கிழமை காலை 8 30 மணிக்கு பிரயாண ஆயத்தங்களுடன் யாழ். வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் சமுகமளிக்குமாறு வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-8)

### உதய வாக்கு

தன்னைத் தானே ஆட்சி செலுத்தாதவனை மற்றவர்கள் ஆட்சி செய்வார்கள்.

= வாங்பெல்லோ.

### நாளை

ஆவணி - 04

வியாழக்கிழமை

திதி: திரயோதசி முற்பகல் 8.00 வரை

நட்சத்திரம்: பூசம் முன்இரவு 10.58 வரை.

சுபநேரம்: 07.35 09.05

ராகுகாலம்: 01.35 - 03.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாவோரின் அடையாள அட்டை பரிசோதனை மிகத் துரிதமாக்கப்படும்

## ஆள்ப்பதிவு திணைக்களத்தில் கணனி வசதி

கொழும்பு, ஒக. 19

கொழும்பு உட்பட மற்றும் இடங்களில் கைது செய்யப்படுபவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசீலிக்கும் பணியை துரிதப்படுத்த ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு கணனி வசதி செய்யப்படவிருக்கிறது.

தமிழர்கள் கைதாவது தொடர்பாக ஆராயும் தொல்லை தவிர்ப்புக் குழு நேற்று முன்தினம் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் கூடிய சமயமே இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டது.

நாடு முழுவதும் கைது செய்யப்படும் தமிழர்கள் தொடர்பாக தினமும் 200 பேரின் அடையாள அட்டைகள் பரிசீலனைக்காக ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும்-

அவற்றைப் பரிசீலிப்பதற்கு காலம் செல்வதாகவும்- ஆள் பதிவுத்திணைக்கள அதிகாரிகள் இக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

இதன் காரணமாகக் கைது செய்யப்படுபவர்கள் பல காலம் தடுத்து வைக்கப்படும் நிலை ஏற்படுவதால் அடையாள அட்டைகளை துரிதமாக பரிசீலிக்க கணனி வசதி செய்யப்படவேண்டும் என்று கூட்டத்தில் கோரிக்கைவிடுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து உடனடியாககணனிவசதி செய்து கொடுக்குமாறு அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

(இ-3)

## சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஒக. 19

கடந்த ஆண்டு நடைபெற்ற செல்வச் சந்நிதி முருகன் ஆலய மகோற்சவத்தின் போது கடமை புரிந்த 300 பரியோவான் முதலுதவிப் படை அங்கத்தவர்களுக்கு அண்மையில் சந்நிதி குருக்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

(ஐ-8)

# இழப்பீடு குறித்து மதிப்பீடு செய்ய பிரதேசசெயலர்பிரிவு மட்டத்தில்குழு

வலி. மேற்கு, ஒக. 19

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும், கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலும் அழியும், அழியாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு குறித்து மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டு வேலைகளுக்கென பிரதேச செயலர் மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதேச செயலர் மட்டத்தில் நியமனம் செய்யப்படும் இக்குழுவின் தலைவராக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கடமையாற்றுவார். இக்குழுவில் நிர்வாக உத்தியோகத்தர் அல்லது பிரதம எழுது வினைஞர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள். பிரதேச செயலரின் கண்காணிப்பின் கீழ் இந்தக்குழு இயங்கவுள்ளது.

★ அசையும், அசையாச் சொத்துக்களின் இழப்பீடு வேலை விரைவாக இடம் பெறுவதை உறுதிப்படுத்தல்.

★ இந்தச் சொத்துக்களின் இழப்பீடு சம்பந்தமாக பொதுமக்களின் சந்தேகங்களுக்கு ஆலோசனை கூறுதல்.

★ வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினாலும், யாழ். செயலகத்தினாலும் குறிப்பிட்ட பிரதேச செயலகத்தில் இழப்பீடு நடவடிக்கைகள் இடம் பெறுவதை உறுதிப்படுத்தல் போன்றவை இக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-175)

# ச. ச. நிலைய நிர்வாகங்கள் ஜனவரி 31-க்கு முன்தெரிவு

யாழ்ப்பாணம், ஒக. 19

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின் புதிய நிர்வாகங்களை எதிர்வரும் நவம்பர் மாதத்திலிருந்து ஜனவரி 31ஆம் திகதிக்குள் தெரிவு செய்யுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த நிர்வாகத் தெரிவுக்கு பிரதேச செயலகங்களிலுள்ள சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரையும் பங்குபற்றச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டபின்னர் சனசமூக நிலைய பிரதேச சமாசம், மாவட்ட சம்மேளனம் போன்றவற்றின் நிர்வாகங்களும் புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

# கண்ணி அகற்றும் பணி தொடருவதற்கு உதவுக

## ஜனாதிபதிக்கு மக்கள் குழு கடிதம்

யாழ்ப்பபாணம், ஒக. 19

யாழ். குடாவில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி இந்த நடவடிக்கை தொடர்ந்து நடைபெற உதவுமாறு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாவில் கடந்த இரண்டரை வருடகாலமாக நிலக்கண்ணிகளை அகற்றுவதில் அக்கறை காட்டப்படவில்லை. இதனால் கணிசமான பொதுமக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதுடன் பல கால் நடைகளும் காயப்பட்டும் இறந்தும் உள்ளன.

தொண்டர் நிறுவனங்கள் பலவற்றின் வேண்டுகோளையடுத்து ஐ. நா. அபிவிருத்தி திட்டம் கண்ணிகளை அகற்றும் பணியை ஏற்றுக்கொண்டது.

ஆனால் தற்பொழுது கண்ணிகளை அகற்றுவதில் புதிய பிரச்சினை தோன்றியுள்ளது. தொடர்பு சாதனங்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்து பொருத்துவதில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பணியை மேற்கொள்ள முன் வந்தவர்கள் இந்த திட்டத்தைக் கைவிட்டுச் செல்வதற்கான நிலை தோன்றியுள்ளது.

எனவே இந்த விடயத்தில் தலையிட்டு கண்ணிகள் அகற்றும் வேலையைத் தொடர்வதற்கு உதவுமாறு [illegible] இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# ஒபடகே யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 19

வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் தலைவர் கே. ஒபடகே எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் மேலதிக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ரி. இராசநாயகம், உலக உணவு நிறுவன இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சுரேஷ் சர்மா, மற்றும் கமநலச்சேவை திணைக்கள உயர்அதிகாரி ஒருவரும் வருகை தரவுள்ளனர் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் வரும் இவர்கள் 27ஆம் திகதி வட பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

அன்றையதினம் ஐ. நா. அபிவிருத்தித்திட்டம், அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம், 'யுனிசெவ்', உலக உணவு நிறுவனம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் சந்திப்பதுடன் யாழ். செயலக அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர்.

28ஆம் திகதி உலக உணவு நிறுவன திட்டங்களான சண்டிலிப்பாய் அழக்குளி குளம், உடுவில் வெலிக்குளம், சுன்னாகம் குடசிழுமலை நீர்த்தாங்கி போன்றவற்றின் வேலைத்திட்டங்களை இக்குழுவினர் நேரில் சென்று பார்வையிடுவார்கள்.

(இ-5)

## வாசகர் திருமுகம்

# கல்வியுலகில் கூட பாரபட்சம் ஏன்?

எமது கிராமத்தில் கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயம் என்ற பெயருடன் கடந்த 30 வருடங்களாக ஒரு பாடசாலை இயங்கி வருகின்றது. இது ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை உள்ள இரண்டாந் தரப் பாடசாலையாகும். இப்பாடசாலையில் கனுவில் கிராமத்தைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள். வேறு கிராமத்தைச்சேர்ந்த பிள்ளைகள் ஒருவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை ஆரம்பித்த காலத்தில் இருந்து இங்கே ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவது குறிப்பிடத்தக்கது. இது பற்றி நாம் பலமுறை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டும் ஒரு வித பலனும் கிடைக்கவில்லை. அப்படியென்றால் தண்டனை பெற்ற ஆசிரியர்களும், பல்கலைக்கழகத்தில் படிப்போரும், நோயாளிகளும், தற்காலிகமாக இடமாற்றம் பெறும் ஆசிரியர்களும், வெளிநாடு அல்லது வேறு தேவைகளுக்கு செல்பவர்களும் இரண்டொரு மாதம் இங்கே வேலை செய்து விட்டுப் போவோம் என்ற நிலைமையில் உள்ளவர்கள்தான் இங்கே நியமிக்கப்படுகிறார்கள். தற்போதுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைப்படி 16 ஆசிரியர்கள் கடமை புரிய வேண்டும். ஆனால் 7 ஆசிரியர்கள் தான் கடமை புரிகிறார்கள்.

தற்போது தகுதி காண் ஆசிரியர்கள், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்டு சகல பாடசாலைகளிலும் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த நியமனங்களில் திணைக்களம் எமக்குப் பாரபட்சம் காட்டியுள்ளது. இது பற்றி திணைக்களத்தில் விசாரித்தால் ஒருவரும் உங்கள் பாடசாலைக்கு வரவிரும்புகிறார்கள் இல்லை என்றொரு பொய்யைக் கூறி சமாளிக்கிறார்கள்.

ஆனால் உண்மையாகவே விடயம் இவர்களுக்கு இப்பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்க எள்ளளவும் விருப்பமில்லை என்பதாகும். வர விரும்புபவர்களையும் இவர்களுக்கு அனுப்ப விருப்பமில்லை. எப்படியாவது இப்பாடசாலையை மூடி எம் சமூகத்தை இன்னும் கீழ் நிலைக்குத் தள்ளுவது தான் இவர்களின் நோக்கம் போல் உள்ளது.

மேலும் இப்பாடசாலையில் போதிய கட்டட, தளபாட வசதிகள் இல்லை. வருடாந்தம் செய்யும் சிறு திருத்த வேலைகள் கூட இங்கே செய்யப்படுவதில்லை. மற்றைய பாடசாலைகளுக்கு கொடுக்கப்பட்டு கவனிக்கப்பட்டு கடைசியில் எதுவும் மிஞ்சி இருந்தால் மட்டும் எமது பாடசாலை கவனிக்கப்படும். ஆனால் இதுவரை அப்படி ஏதும் கிடைத்ததாக நான் அறியவில்லை.

இச்சுற்றாடலில் உள்ள பிள்ளைகள் தமது கல்வியை வேறு பாடசாலையில் சென்று கற்க வசதியில்லாதவர்கள். படித்தால் இங்கு தான். இல்லையென்றால் பேசாமல் வீட்டில் தங்கி விடுவார்கள். இப்படியான நிலையில் இப்பாடசாலை புறக்கணிக்கப்பட்டால் இச்சிறார்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது?

புதுயுகம் காணப்புறப்படும் எம் இளைய தலைமுறையினர் வளரவிருக்கும் வேளையில் உயர்வு, தாழ்வு, சாதிமதபேதம் பார்ப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும். நாம் 21 ஆம் நூற்றாண்டை நோக்கிச் செல்கிறோம் என்பதை இவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை.

இனிமேலாவது எமது கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மீது உரிய அக்கறை எடுக்கப்படுமா?

செ. சற்குணம்

கனுவில்,
கரவெட்டி.

# கோயிலும் ஒலிபெருக்கியும்

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும்கோயில்கள் பல உண்டு. கூப்பிடு தூரத்திற்கு ஒரு கோயில் உண்டு. இது மிக நன்று. ஆனால் திருவிழாக் காலங்களிலும், விசேட நாட்களிலும் ஒலிபெருக்கியில்லாத கோயில் இல்லை. ஆலயங்களில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தும் நேரம் கூட அதிகமாக்கப்பட்டுள்ளது. இது அவசியந்தானா? என்று கற்றோர் சிந்திக்க வேண்டும்.

கோயிலுக்கு அண்மையில் பாடசாலை உண்டு, மாணவர்களின் கல்வியை ஒலிபெருக்கிச் சத்தம் குழப்பும். பரீட்சை நேரங்களில் சிரமத்தைக் கொடுக்கும். வீட்டில் பிள்ளைகள் படிக்கின்ற நேரத்தில் ஒலிபெருக்கி இடைஞ்சல் கொடுக்கும். வியாபார நிலையங்களுக்கு - வங்கிகளுக்கு - வேலைத்தலங்களுக்கு இச்சத்தம் தொல்லை கொடுக்கும் என்பது தெரிந்ததே.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தலாம். ஆனால் ஆலயத்தில் பூசை நேரங்களுக்கு முன்பும் பின்புங்கூட ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. கோயில் நிர்வாகிகள், உபயகாரர்கள், பக்திமான்கள் தயவுசெய்து சிந்தியுங்கள். மற்றவர்களுக்கு தொல்லை கொடுக்காமல் வாழ்வதுதான் சைவநீதி. கோயில்கள் கிட்டக்கிட்ட இருப்பதால் தினமும் ஒலிபெருக்கிச் சத்தத்தை கேட்கவேண்டியுள்ளது. இந்தநிலை மாறுமா? சமூகத்தில் குழப்பங்கள் தவிர்க்கப்படுமா?

வே. தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் ஒத்திவைப்பு விடயத்தால் சர்ச்சை

# நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி!

# 40 நிமிடத்தில் சபை ஒத்திவைப்பு!!

கொழும்பு, ஒக். 19

மாகாண சபைத் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் அவசர காலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தியமை தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று எழுந்த அமளி துமளியை அடுத்து நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத் தொடர் 40 நிமிடங்களில் ஒத்திவைக்கப் பட்டது.

நேற்றுக் காலை 10மணிக்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமானதும் ஐ. தே. கட்சி எம். பியான தர்மதாஸ பண்டா இப்பிரச்சினையை எழுப்பினார்.

இது ஒரு சிறப்புரிமைப் பிரச்சினை என்று தர்மதாஸ பண்டா கூறிய போது இடைமறித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே இது ஒரு சிறப்புரிமைப் பிரச்சினை அல்ல இதனைத் தற்சமயம் சபையில் எழுப்ப நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரிமை இல்லை என்றும் கூறினார்.

சிறப்புரிமைப் பிரச்சினைகள் முதலில் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று கூறிய பிரதி சபாநாயகர் அனில் முனசிங்க இருப்பினும் தர்மதாஸ பண்டா முன்வைத்த பிரச்சினை நாடாளுமன்ற நடைமுறைக்கு மாறுபட்டதல்ல என்று கூறி அவரைத் தொடர்ந்து பேச அனுமதித்தார்.

அரசு மாகாண சபைத் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு முன்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் — அவசர காலச் சட்டத்தை அதற்குப் பயன்படுத்துவது உறுப்பினர்களின் உரிமையை மீறுவதாக இருப்பதாகவும்— தர்மதாஸ பண்டா கூறினார்.

இந்த நிலையில் அரச — எதிர்த்தரப்பு எம். பிக்கள் தொடர்ந்து போட்ட கூச்சல் காரணமாகச் சபை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

ஐ. தே. கட்சியின் எம். பிக்கள் சிலர் சபையில் அரசுக்கு எதிரான பல்வேறு சுலோக அட்டைகளையும் தூக்கிப் பிடித்தனர். 10நிமிட இடைவெளியின் பின்னர் பிரதி சபா நாயகர் எம். பியான தர்மதாஸ பண்டாவின் கேள்விக்கு இடமளிக்க முடியாது எனக் கூறியதைத் தொடர்ந்து ஐ. தே. கவினர் மேலும் கூச்சல், குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இதனையடுத்து நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இன்று காலை 9-30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. (உ-6)

## பங்கீட்டு அட்டைக்கு 5கிலோ சீனி, 5கிலோ அரிசி

### இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 19

ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ சீனியும், 5 கிலோ அரிசியும் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

யாழ். அரச அதிபரின் பணிப்பின் பேரில் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினால் இந்த விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ப. நோ. கூ. சங்கங்களிலும் இந்த விநியோகம் நடைபெறும்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளை இலாபம் அடிப்பவர்களின் பதுக்கல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலே மேற்படி பொருள்கள் விநியோகம் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் போதிய அளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்ற போதிலும் சிலர் திட்டமிட்டு பொருள்களைப் பதுக்கி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது. (உ-5)

## சனியன்று சூரியகிரகணம்

யாழ்ப்பாணம், ஒக். 19

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை சூரியகிரகணமும் அமாவாசையுமாகும்.

இந்திய நேரப்படி விடியற் காலை 4.52 மணி முதல் காலை 6.43 மணி வரை சூரியகிரகணம் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## திருடர்கள் சிக்கினர்

நெல்லியடி ஒக். 19

வடமராட்சிப் பகுதிகளில் இடம் பெற்று வந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மூவர் பிடிக்கப்பட்டு அவர்களிடமிருந்து பெறுமதி மிக்க பொருள்கள் மீட்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

பருத்தித்துறையிலுள்ள புளொட் இயக்கத்தினரே, இது சம்பந்தமாக, தும்பளை பன்னக் கட்டையைச் சேர்ந்த கந்தசாமி – ஸ்ரீ சந்திரராசா (வயது 32) கந்தசாமி– விக்கினேஸ்வரன் (வயது 30) கந்தசாமி ஸ்ரீரவீந்திரராசா ஆகிய மூவரையும், கைது செய்து பெறுமதி மிக்கபொருள்களை மீட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

திருடர்களிடம் பொருள்களைப் பறிகொடுத்தவர்கள் உடனடியாக பருத்தித்துறை புளொட் அலுவலகத்தில் தமது பொருள்களை ஆதாரங் காட்டிப் பெற்றுச் செல்லுமாறு, புளொட் இயக்கப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-109)

## சமய சந்நிதியில்

புலோலி அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேதபசுபதீஸ்வரர் ஆலய சிவன் கோயிலில் இன்று 19 ஆம் திகதி புதன் கிழமை பிரதோஷ, விரதம், பூசை, வழிபாடுகள் இடம் பெறும். (உ-30)

★ ★ ★

சாவகச்சேரி, அருள்மிகு அமிர்தபாஷிணி சமேத சந்திர சேகர வாரிவனநாத சிவன் தேவஸ்தான இலட்சார்ச்சனைப் பெருவிழா நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து பத்து தினங்கள் விழா நடைபெறும் காலை 8.30மணி தொடக்கம் காலை 11.30மணி வரையும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும் இரு நேரம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் தலைமையில் இலட்சார்ச்சனை நடைபெறும். நாளை பத்தாம் நாள் — 27 ஆம் திகதி— மணவாளக் கோல விழாவும் 1008 சங்காபிஷேகமும் நடைபெற்று சுவாமி திருவுலா இடம் பெறும். (உ-31)

(உ-31)

## சிறுவன் படுகாயம்

சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சமயம், துடுப்பாடிய சிறுவனின் கையிலிருந்து 'பற்' (துடுப்பு) பக்கத்திலிருந்த சிறுவனின் தலையைப் பதம் பார்த்ததில் அச்சிறுவன் படுகாயமடைந்தான்.

நல்லூர் நாவலர் வீதிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஜெயகரன் நிமோஜ் (வயது 7) என்ற சிறுவனே காயமடைந்தான். சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் இச்சிறுவன் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

## வெள்ளி விழா

சண்டிலிப்பாய், ஒக். 18

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் — சங்கத்தில் 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த — பணியாளர்களைக் கௌரவிக்கும் வெள்ளி விழா வைபவம் இன்று முற்பகல் 9-30 மணிக்குச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு. சண்முகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திருமதி கோ. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்வர். (உ-135)

## இணுவில் பகுதியில்

# கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மீட்கப்பட்டன!

### உரியவரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

இணுவிலில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் உரிமையாளர்களிடம் யாழ். நீதிமன்றத்தில் வைத்து நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன.

அண்மையில் இணுவில் மஞ்சத்தடியில் இரு வீடுகளுக்குள் நுழைந்து, விளையாட்டுத் துப்பாக்கியைக் காட்டி வீட்டுக்காரரைப் பயமுறுத்தி 80 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும், 36 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றிருந்தனர்.

இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸாரினால் இருவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட நகைகளும் யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நகை உரிமையாளர்கள் நேரில் அழைக்கப் பட்டனர்.

அவர்கள் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டியதுடன் தமது நகைகளையும் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் தொடர்பாக நீதிவான் விசாரித்த பொழுது அந்தப் பணத்தைச் செலவு செய்து விட்டதாகவும் இருவரும் தெரிவித்தனர்.

இவ்வழக்கைத்தொடர்ந்து விசாரணை செய்த யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு எதிரிகளான ஏழுமலை ரஞ்சித்குமாருக்கு 50 ஆயிரம் ரூபாவும், அகிலேசம்பிள்ளை சுந்தரலிங்கத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்து தண்டப் பணத்தை உடனடியாக செலுத்துமாறு உத்தரவிட்டார்.

எதிரிகள் தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை இவர்களைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் பணித்தார். (உ-5)


## இதயபூர்வமான அஞ்சலி

### நடேசு மனோகரன்

(துறைமுக வெளிக்கள உத்தியோகத்தர் (W.F.O.), உணவுத்திணைக்களம், யாழ். செயலகம்)

அவர்களின் மறைவிற்கு எமது இதய பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்து அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரச உணவுக்களஞ்சிய
வகுப்புத் தொழிலாளர் சங்கம்,
காங்கேசன்துறை.

(58487)


# குடும்பஸ்தரின் மரணம் குறித்து ஒரு மாதத்தின் பின்னர் விசாரணை

### மனைவியின் முறையீட்டினால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

ஒருமாதத்துக்கு முன்னர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இறந்ததாகக் கூறப்படும் தனது கணவனின் மரணத்தில் சந்தேகமிருப்பதாக அவரது மனைவி செய்த முறைப்பாட்டையடுத்து அம்மரணம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த இருநாள்களாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழையில் வசித்து வந்த மாணிக்கவாசகர் பாலசுப்பிரமணியம் (52 வயது) என்ற தனது கணவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த பொழுது அவருக்கு திடீரென மரணம் ஏற்பட்டதை நம்ப முடியவில்லை என்றும்—

இது தொடர்பான விசாரணையை நடத்தி உண்மையைக் கண்டுபிடிக்க உதவுமாறும்—

இறந்தவரின் மனைவியான திருமதி பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி (51 வயது) என்பவர் மல்லாகம் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிவான் கடந்த இரு நாள்களாக இதுதொடர்பாக விசாரணைகளை நடத்திவருகிறார். இதுவரையும் ஐந்து பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம் மரணம் தொடர்பாக இறந்தவரின் மனைவி உதயன் செய்தியாளரிடம் கூறியதாவது:

வலிகாமம் இடப்பெயர்வைத் தொடர்ந்து எனது மூன்று பிள்ளைகளுடன் வன்னிப் பகுதிக்குச் சென்று வாழ்ந்து வந்தோம். எனது கணவரும் எம்முடன் வன்னியில் வாழ்ந்து வந்தார். யாழ்ப்பாணத்திற்கு மக்கள் மீளக்குடியேறத் தொடங்கிய பின்னர் தான் ஊருக்கு சென்று நிலைமைகளை பார்த்துவிட்டு எங்களைக் கூப்பிடுவதாக தெரிவித்து அவர் முதலில் வந்து பல நாள்களாக தெல்லிப்பழையில் வசித்துவந்தார்.

நாம் வன்னியிலும் அவர் தெல்லிப்பழையிலும் வசித்து வந்தபோதும் எங்களுக்கு மணியோடர் மூலம் அவ்வப்போது அவர் பணம் அனுப்பி வைப்பார்.

ஜூலை 15 ஆம் திகதி அவர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஜூலை 16 ஆம் திகதி அவரிடமிருந்து நாம் தங்கியிருந்த வவுனியாவுக்கு ஆயிரத்து 500 ரூபா மணியோடரில் வந்தது.

அவர் இறந்த செய்தி கேட்டு ஒன்பதாம் நாள் ஊருக்கு வந்தோம். எமது அனுமதி எதுவுன்றி அவரது உடல் புதைக்கப்பட்டுள்ளது. மரணத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப் படவில்லை. மரண விசாரணையோ, பிரேத பரிசோதனையோ எதுவும் நடத்தப் படவில்லை. இதனால் எனது கணவரின் மரணத்தில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது — என்றார்.

## வடமராட்சியில் நேற்று மின்னலுக்கு ஒருவர் பலி

இடி மின்னல் தாக்கியதனால் ஒரு மீனவர் உயிரிழந்தார். அவருடன் கூட நின்ற வேறொரு இளைஞன் கையில் காயமடைந்துள்ளார்.

இப்பரிதாப சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள கற்கோவளத்தில் இடம்பெற்றது.

கற்கோவளம், கடற்கரையில்சிறிய கத்தியுடன் நின்று வலையிலிருந்து மீன்களை அகற்றிக் கொண்டிருந்த— கற்கோவளத்தைச் சேர்ந்த— வேலுப்பிள்ளை ரவீந்திரன் (வயது 34) என்ற மீனவரே மின்னல் தாக்கி முகம் எரிந்த நிலையில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவருடன் கூட நின்ற— இதே இடத்தைச் சேர்ந்த— தங்கவடிவேல் சுதன் (வயது 20) என்ற இளைஞன் வலது கையில் படுகாயமடைந்தார்.

இறந்தவரது மரண விசாரணை மந்திகை மருத்துவமனையில் நேற்று நண்பகல் நடைபெற்றது. பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணையின் பின் சடலத்தை மனைவியிடம் கையளிக்க உத்தரவிட்டார்.

கையில் காயமடைந்தவர் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15-173-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஒத்திவைப்பை எதிர்த்து பத்து வழக்குகள் வரை தாக்கலாகும்?

கொழும்பு, ஓக. 19

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதை எதிர்த்து ஐ. தே. கட்சி அடிப்படை உரிமை கள்மீறல்தொடர்பான ஐந்து வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளது. எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரையின் பேரில் ஊவா, வடமத்திய, மேல், சப்பிரகமுவ மற்றும் மத்தியமாகாண சபைகளுக்காக ஐ. தே. கட்சியின் சார்பில் வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்த 5 வேட்பாளர்கள் இந்த மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இதை விட இந்த மாகாண சபைகளின் முன்னாள் முதலமைச்சர்கள் நால்வரும் மேல் மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் தனித் தனியான வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

# சங்கீத, நடன டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் 27 ஆம் திகதி என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பட்டதாரி ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி இதுவரை நியமனம் வழங்கப்படாத சங்கீத, நடன டிப்ளோமா பட்டதாரிகளுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி ஆசிரிய நியமனம் வழங்கப்படும்.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இதற்கான உறுதிமொழியை நேற்று வழங்கினார் என்று யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஆலோசகர் ந. விஜயசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சை முடிவடைந்த பின்னரும் இதுவரை சங்கீத, நடனப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இதற்கான காரணங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருடன், தாம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கேட்ட பொழுதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என ந. விஜயசுந்தரம் தெரிவித்தார்.

சங்கீத, நடன பட்டதாரிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் நேர்முகப் பரீட்சைகள் கடந்தவாரமே முடிவுற்றது. இதன் காரணமாகவே நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகவும்—

நியமனம் வழங்கப்படாத ஏனைய 23 பட்டதாரிகளுக்கும் 27 ஆம் திகதி நியமனம் வழங்கக்கூடிய வகையில் நியமனக் கடிதங்கள் யாழ். கல்வித்திணைக்களத்துக்கும், சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும்—

கல்விச் செயலாளர் தமக்குத் தெரிவித்ததாக விஜயசுந்தரம் மேலும் தெரிவித்தார்.

(உ-7-9)

# அடுத்து எந்த தேர்தலை நடத்துவது? தீர்மானிப்பதில் அரசுக்குச் சிக்கல்!

கொழும்பு, ஓக. 19

நாடெங்கும் அவசரகாலச் சட்டத்தை விஸ்தரித்து அதன் மூலம் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைத்து, அதற்குப் பதிலாக ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ள போதிலும்—

மாகாண சபைகளுக்கான தேர்தல்களையே முதலில் நடத்த வேண்டும் என எவராவது வழக்குத் தாக்கல் செய்யின் அதனால் அரசாங்கம் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டி நேரிடும் என சட்டமா அதிபர் தெரிவித்தாராம்.

இதனால் குறிப்பாக எதைச் செய்யலாம் என முடிவெடுக்க முடியாத நிலையில் அரசாங்கக் கட்சித் தலைவர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முறையை ஒழிப்பது என வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த அரசு ஜனாதிபதி தேர்தலை நடத்த முற்படுவது குறித்து மக்கள் விசனமுற்றிருப்பதால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக உத்தேச அரசமைப்புக் குறித்து மக்கள் கருத்துக் கணிப்பை நடத்தினால் என்ன என்ற கருத்து அரசாங்கக் கட்சி வட்டாரத்தில் மேலோங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் அதிகாரப் பரவலாக்கும் திட்டத்தைக் கருத்துக் கணிப்பின் போது மக்கள் நிராகரித்தால் அதன் பின்னர் நடத்தப்படும் ஜனாதிபதித் தேர்தல் அரசுத் தரப்புக்குச் சாதகமாக அமையாது போகலாம் என்றும்—

அதனால் முதலில் ஜனாதிபதித் தேர்தலையே நடத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி கருதுவதாகவும்—கூறப்படுகின்றது.

இருப்பினும் அதனை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்படுமாயின் அந்த வழக்கு விசாரணைகள் முடியும் வரை என்ன செய்யலாம் எனத் தீர்மானிக்க முடியாத நிலைக்கு அரசு தரப்புத் தள்ளப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-10)

# நல்லூர் உற்சவத்தின்போது சைவாசாரத்தைப் பேணுக!

### சைவ பரிபாலனசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் உற்சவ காலத்தில் கோயிலிலும் சுற்றாடலிலும் சைவாசாரங்களை உரிய முறையில் பேணி, எமது சமயத்தின் பெருமை குறையாமல் பார்த்துக்கொள்வோமாக!

— இவ்வாறு குடாநாட்டு சைவ மக்களுக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அழைப்பு விடுத்துள்ளது.

மக்களை நன்னெறியில் வழிப்படுத்துவதற்காகவே சமயங்கள் எழுந்தன; அவ்வகையில் நமது மதமும் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

சமூக, சமய நிகழ்வுகளுக்கு மத்திய நிலையமாக விளங்குவது கோயில்களாகும். பூஜை, வழிபாடுகளுக்கு அப்பால் எமது சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் நற்செயல்கள் ஆலயங்களை மையமாகக் கொண்டே நிகழ்ந்து வந்தன; நிகழ்ந்து வருகின்றன.

யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கைமுறை கந்த புராண கலாசாரத்தை அடியொற்றியது என்று பெரியோர் கூறுவர்.

அந்த வகையில் கந்தன் வழிபாடு — முருகன் ஆராதனை — மிளிரும் குடாநாட்டின் சிறந்த தலமாக நல்லூர் பதி விளங்குகின்றது.

பூஜை, வழிபாட்டுக்கு அப்பால் எமது சமய சாரங்களைப் பிரதிபலிக்கும் கதாப்பிரசங்கங்கள், தெய்வீக அருளுரைகள், தெய்வீக இசை நிகழ்வுகள் போன்ற நல் நிகழ்வுகள் காலங்காலமாக நல்லூர்ப் பதியின் சுற்றாடலில் நடைபெற்று வந்துள்ளன; நடைபெற்று வருகின்றன.

ஆலய உற்சவ நிகழ்வுகளுக்கும் இத்தகைய நல்ல நிகழ்வுகளுக்கும் இடையூறும் களங்கமும் விளைவிக்கும் எந்தக் காரியங்களையும் செய்ய வேண்டாம் எனவும் — அத்தகைய தவறுகளை இழைக்க முற்படுவோரை நல்வழிப் படுத்துமாறும் — யாழ்ப்பாண சைவ மக்களைக் கோருகின்றோம்.

— இவ்வாறுசைவபரிபாலன சபையின் சார்பில் அதன் தலைவர் கப்டன் என். சோமசுந்தரம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

(உ)


எமது புதிய வெளியீடு!

கார்த்திக், அஜித்குமார் ரோஜா நடித்த

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

CD வெளியீடு!

உண்மை கோல்மால்

அடுத்த வெளியீடு!

நிலாவே வா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4604)



யாழ்ப்பாண மக்களே!

அமெரிக்கப் பிரசையாக அரியதோர் சந்தர்ப்பம்!

வருடா வருடம் லொத்தர்முறை மூலம் அமெரிக்க அரசு வழங்கும் விசாவைப் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.

விண்ணப்பப்படிவங்கள் சகல புத்தக விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

V. லிங்கேஸ்வரன்

92, கந்தப்பசேகரம் வீதி,

யாழ்ப்பாணம்.

(54461)


## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பினர் கேட்டுள்ளனர்.

தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிட்டா விட்டால் நாளை முதல் மீண்டும் ஹர்த்தால் முழு அளவில் அனுஷ்டிக்கப்படும் எனவும் புளொட் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் வவுனியாவில் நேற்று பூட்டப்பட்டிருந்த இரு கடைகள் சீருடையினரால் பலவந்தமாக திறக்கப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இந்த ஹர்த்தால் காரணமாக படையினர்—புளொட் உறவில் முறுகல் நிலை [illegible]

(உ-9-6-164)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்)

பனை செய்து வருவதைத் தாங்கள் கடுமையாக கண்டிப்பதாகவும்—

யாழ்ப்பாண வர்த்தக ஊழியர் சங்கம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

(உ-5-9-6)

## வீதி...

(முதலாம் பக்கத் தொடர்)

வாகனம் வீதியை விட்டு விலகி சறுக்கிச் சென்று தடம் புரண்டதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட ஜெனரல் சரத் முனசிங்க உயிரிழந்த இளைஞரின் குடும்பத்தவரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததாகவும்—

ஒரு தொகை நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாகவும்—

படை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட இராணுவ வாகனத்தின் சாரதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்—

வாகனமும் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

*மற்றைய விபத்துக்கள்*

நேற்றுக்காலை மல்லாகத்தில் இடம்பெற்ற மினிபஸ் விபத்து — சைக்கிள் விபத்தில் தெல்லிப்பளையைச் சேர்ந்த நடராசா சிவாகரன் (வயது 21) என்பவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் புத்தூரில் இடம்பெற்ற மினிபஸ் விபத்து ஒன்றில் அச்சுவேலியைச் சேர்ந்த அ. மதிவதனன் (வயது 11) என்ற சிறுவன் உயிரிழந்தான்.

திருமணத்துக்கு மினிபஸ்ஸில் சென்றுகொண்டிருந்த சமயம் புத்தூரில் சோதனைச் சாவடியில் இறங்கி சோதனை முடிவடைந்த பின்னர் பஸ் புறப்பட்ட சமயம் அதில் ஏறுவதற்கு முற்பட்ட போது சிறுவன் தடுக்கி வீழ்ந்து சில்லில் நெரியுண்டு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மந்திகையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா முருகமூர்த்தி (வயது 32), மூளாயைச் சேர்ந்த த. பாலு (வயது 33) ஆகிய இருவரும் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-9-15-139-154-109)

## சுற்றுப்போட்டிகள்

வடக்கு— கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான மாகாண மட்ட பெருவிளையாட்டுச் சுற்றுப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளிலும்—

மெய்வன்மைப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளிலும் —

திருகோணமலையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8-86)

## நினைவஞ்சலி

திருகோணமலை இந்து நிறுவனங்களும், இந்து அன்னையர்களும் இணைந்து நடத்தும்சிவதர்மவள்ளல் க. கனகராசாவின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலியும் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலை சிவயோக சமாஜ மண்டபத்தில் பொ. கந்தையா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அஞ்சலியுரைகளும் கவிதாஞ்சலியும் இடம்பெறவுள்ளன.

அமரர் க. கனகராசாவின் ஆத்மசாந்திப் பூசை பகல் 11.30 மணிக்கு ஆலடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

அமரரின் நினைவாக அன்றைய தினம் அன்பு இல்லம், சண்முகா இல்லம், சிவானந்தா இல்லம், அன்னை சாரதா இல்லம் ஆகியவற்றைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

(இ-8)

## ஈழ அகதி...

(முதலாம் பக்கத் தொடர்)

ளைகளின் தாயார் வறுமை காரணமாகவே அகதி முகாமுக்கு அருகிலுள்ள வீடு ஒன்றில் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3-9)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

சிவாஜிலிங்கம், தலைவர் எஸ். விநோதலிங்கம் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர் பதவியை ஏற்க வேண்டினர்.

இதைத் தொடர்ந்து எம். பி. பதவியை ஏற்க செல்வம் சம்மதித்ததாகவும்—

அவர் இன்று பதவியேற்கவிருப்பதாகவும் — ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

கது.

மினி சூறாவளியால் நகரில் இருந்த பெரிய மரங்கள் சில வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளன. மின் கம்பங்கள் சிலவும் சேதமடைந்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக நிலவிவந்த கடும் வரட்சியின் பின்னர் நேற்று மழையுடன் இந்த மினி சூறாவளி நகரைத் தாக்கியது.

(உ-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org